**15.07.2026**

**அ.வ.எண். 113/2024**

**வா.சா.1 – திரு. அகத்தீஸ்வரன், த/பெ. வெங்கடாசலகவுண்டர்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Shanthi Assistant on 15.07.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா-ஆ.2 ஆவணம் மூலமாக எனது குடும்பத்தாரும், ராமசாமியும் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். பொதுவாக பரிவர்த்தனை பத்திரம் ஒருவர் சொத்தை மற்றொருவருக்கு அனுபவம் செய்வதற்கு ஏற்ப மாற்றி கொள்வது என்றால் சரிதான். வா.சாஆ.2 ஆவணத்தின் படி, எனது குடும்பத்தார் எனக்கு மட்டும் அனுபவம் செய்து கொள்ள அனுமதி அளித்தவாறு ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக பரிவர்த்தனை பத்திரம் ஒருவருக்கு ஆதரவாக எழுத முடியாது என்றும், தரப்பினர்கள் அனைவரும் சொத்தை அனுபவிப்பது போல் தான் எழுத முடியும் என்றால் அவ்வாறு இல்லை.

2. என் தங்கை தாக்கல் செய்த அ.வ.எண்.114/2024 வழக்கிற்கு விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் அவரும் சொன்னார், நானும் சொன்னேன். என் தங்கை என் அப்பாவின் சொத்துக்கள் பாகம் ஏற்படாமல் உள்ளது என சொல்லியுள்ள நிலையில் அது சரியா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எந்த இடத்தில், எவ்வளவு நீள, அகலத்திற்கு வாய்க்காலை சேதப்படுத்தியுள்ளனர் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எந்த வாய்க்காலை சேதப்படுத்தவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. 21.06.2024 தேதியில் வா.சா.ஆ.6 பொது ஒப்பந்தம் ஏற்பட்டதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றும், ஆவணத்திலும் அவ்வாறு தான் உள்ளது என்றால் சரிதான். 3ம் பக்கத்தில் கையொப்பம் 22.06.2024 என்று உள்ளது என்றால் சரிதான். இரு சாட்சிகளின் கையொப்பத்தின் கீழ் 22.04.2024 என உள்ளது என்றால்

சரிதான். மேற்படி ஆவணத்தில், 5ம் பத்தி வரை ஒரு கையெழுத்தும், 6 முதல் 8 பத்தி வரை உள்ள கையெழுத்து வேறு ஒரு நபரின் கையெழுத்து என்றால் அவ்வாறு இல்லை. ஒரு நபருடையது தான். நான் சொல்வது தவறு என்றும், வழக்கிற்காக மேற்படி ஒப்பந்தத்தை நானாக ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. ஒரே பரிகாரத்திற்காக அ.வ.எண்.113/2024 மற்றும் 114/2024 ஆகிய இரு வழக்குகள் தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் வாரிசுமையின் படி இருவர் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி வாய்க்காலை அடைத்ததாகவும், வண்டித்தடத்தை மறைப்பதாகவும் சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று அதை காண்பித்து அறிக்கை தாக்கல் செய்யாததால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

4. நான் சொல்வது போல், அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறாததால் தான் நீதிமன்ற ஆணையரை அழைத்து செல்ல எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இன்றுவரை PAP வாய்க்காலில் எனது பூமிக்கு, எனது இறவையில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்றும், எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. PAP வாய்க்கால் பிரச்சனை சம்மந்தமாக தீர்மானிக்க சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் அதிகாரம் உள்ளது. ஒரே பரிகாரத்திற்காக இரு வழக்குகள் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரம் மற்றும் மூல காரணம் இல்லை என்றும் எனவே 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால் நான் அவர்களிடம் என் பிரச்சனையை சொன்னேன். அவர்களால் முடிக்க முடியவில்லை என சொல்லி நீதிமன்றத்தை அணுகுமாறு சொன்னார்கள். 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் எந்த தேதியில், எப்போது புகார் அளித்தேன் என வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு வழக்குரையில்

சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு புகார் அளித்திருந்தால், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் புகார் அளித்தது சம்மந்தமாக ஆவணம் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. PAP வாய்க்கால் அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதில் நான் நடந்துகொள்ளவும், பைப் லைன் அமைத்துகொள்ளவும், சம்மந்தப்பட்ட துறையிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். நான் அவ்வாறு முன் அனுமதி பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அரசு அனுமதி பெறாமல் எங்களது குடும்பத்திற்குள் நாங்களாக பொய்யான ஆவணம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல.

3. எனது வழக்குரை பத்தி 5ல், க.ச.எண்.578/1 நெ.காலையில் வடக்காக சென்று PAP வாய்க்கால் பாலம் வழியாக கிழக்கே திரும்பி ராமசாமிக்கு பாத்தியப்பட்ட பூமியில், கிழக்கே வந்து மேற்படி ராமசாமியின் பூமியில் மேல்கோட்டில் வடக்கு நோக்கி வந்து மேற்படி காலையில் அகஸ்தீஸ்வரர் பூமி வழியாக மேல்கோட்டில் வடக்கே வந்து சிதம்பரசாமி பூமி வரை செல்லும் 12 அடி அகல தடத்தில் வண்டி, வாகனாதிகள், கால்நடை வகையறா ஓட்டி தடம் நடந்துகொள்ளும் பாத்தியமும் மற்றும் மேற்படியார்கள் மேற்படி தடத்தின் வழியாக பூமிக்கடியில் குழாய் பதித்து கொள்ளும் பாத்தியமும் சகிதம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. PAP வாய்க்காலில் பைப் லைன் அமைத்துள்ளேனா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி அகஸ்தீஸ்வரன் பூமியில் பைப் லைன் போடாமல் வெங்கடாசல கவுண்டர் பூமியில் பைப் லைன் போட்டுள்ளார். 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கெதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டி மேற்படி நபர்களை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கெதிராக வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur